www.tnpscjob.com

Tsi8S

தென்காசி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

## வகுப்பு 8

காலம்: 2.30 மணி

**அறிவியல்**

மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **12×1=12**

1) ஒளிச்செறிவு என்பது .............யின் ஒளிச்செறிவாகும்.
அ) லேசர் ஒளி ஆ) புறஊதாக் கதிரின் ஒளி
இ) கண்ணுறு ஒளி ஈ) அகச்சிவப்புக் கதிரின் ஒளி

2) இரண்டு பொருள்களைத் தேய்க்கும் போது எவை இடமாற்றம் அடைவதால் மின்னேற்றம் ஏற்படுகிறது?
அ) நியூட்ரான்கள் ஆ) புரோட்டான்கள்
இ) எலக்ட்ரான்கள் ஈ) புரோட்டான்களும் எலக்ட்ரான்கள்

3) அழுத்தத்தின் அலகு
அ) பாஸ்கல் ஆ) $Nm^{-2}$ இ) பாய்ஸ் ஈ) அ மற்றும் ஆ

4) பாஸ்கல் விதி இதில் பயன்படுகிறது.
அ) நீரியல் உயர்த்தி ஆ) தடை செலுத்தி (பிரேக்)
இ) அழுத்தப்பட்ட பொதி ஈ) இவை அனைத்தும்

5) வெப்பக்கடத்தல் முறையில் வெப்ப ஆற்றல் பரிமாற்றம் .............ல் நடைபெறும்.
அ) திடப்பொருள் ஆ) திரவப்பொருள் இ) வாயுப்பொருள் ஈ) அனைத்தும்

6) கேதோடு கதிர்கள் ............. ஆல் உருவாக்கப்பட்டவை.
அ) மின்சுமையற்ற துகள்கள் ஆ) நேர்மின்சுமை பெற்ற துகள்கள்
இ) எதிர்மின்சுமை பெற்ற துகள்கள் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

7) ஆன்ட்ரோஜன் உற்பத்தி ............. ஆல் ஒழுங்குபடுத்தப்படுகிறது.
அ) GH ஹார்மோன் ஆ) LH ஹார்மோன்
இ) TSH ஹார்மோன் ஈ) ACTH ஹார்மோன்

8) ............. மூட்டுகள் அசையாதவை.
அ) தோள்பட்டை மற்றும் கை ஆ) முழங்கால் மற்றும் மூட்டு
இ) மேல்தாடை மற்றும் மண்டை ஓடு ஈ) கீழ்தாடை மற்றும் மேல்தாடை

9) மண் அரிப்பைத் தடுக்கும் தாவரங்கள்
அ) பாசிகள் ஆ) பூஞ்சைகள்
இ) பிரையோஃபைட்டுகள் ஈ) டெரிடோஃபைட்டுகள்

10) கீழ்க்காண்பவற்றுள் நீர்க் கரைசலில் மின்சாரத்தைக் கடத்துவது .............
அ) அமிலம் ஆ) காரம்
இ) அமிலம் மற்றும் காரம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

11) காற்றேற்றம் செய்யப்பட்ட நீரில் ............. உள்ளது.
அ) காற்று ஆ) ஆக்ஸிஜன்
இ) கார்பன் டை ஆக்சைடு ஈ) நைட்ரஜன்

12) ............. ஒரு புரோகேரியோட்டிக் நுண்ணுயிரியாகும்.
அ) வைரஸ் ஆ) ஆல்கா இ) பூஞ்சை ஈ) பாக்டீரியா

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** **5×1=5**

13) செல்லுக்கு வெளியே காணப்படும் வைரஸ்கள் ............. எனப்படுகின்றன.

14) இரண்டு எலும்புகள் சந்திக்கும் இடம் ............. என அழைக்கப்படுகிறது.

15) டங்ஸ்டனின் குறியீடு .............

16) பிரைன் கரைசலின் மின்னாற்பகுத்தல் ............. வாயுக்களைத் தருகிறது.

17) வெப்பக் கட்டுப்படுத்தி என்பது ............. மாறாமல் வைத்திருக்கிறது.

**III. சரியா அல்லது தவறா எனக் கூறுக. தவறான கூற்றைத் திருத்துக:** **5×1=5**

18) வெப்பக் குடுவையில், சில்வர் சுவர்கள் வெப்பத்தை வெளிப்புறத்தில் எதிரொளிக்கின்றன.

19) தூண்டல் முறையில் மின்னேற்றம் செய்யப் பயன்படும் ஒரு கருவி நிலைமின்காட்டி.

TNPSC JOB | www.tnpscjob.com

www.tnpscjob.com



20) ஒரு வேதிவினை என்பது தற்காலிக வினையாகும்.

21) உலர்ந்த நிலையில் உள்ள காரங்களைத் தொடும்போது அவை வளவளப்புத் தன்மையுடன் காணப்படும்.

22) முன் கண்ணறை திரவம் கண்ணின் வடிவத்தைப் பராமரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**IV. பொருத்துக:** **5×1=5**

23) அ) வெப்பநிலை - நீலப் பச்சைப் பாசி

ஆ) கேதோடு கதிர்கள் - வயிற்று உபாதைகள்

இ) கடின நீர் - சர் வில்லியம் குரூக்ஸ்

ஈ) பருமடைதல் - குளிர்ச்சி அல்லது வெப்பத்தின் அளவு

உ) சையனோஃபைசி - பாலின முதிர்ச்சி

**V. எவையேனும் 12 வினாக்களுக்கு விடையளி:** **10×2=20**

24) ஆம்பியர் - வரையறு.

25) வெப்பநிலையை அளக்க உதவும் கருவியின் பெயரினைத் தருக.

26) ஒரு வளிமண்டல அழுத்தம் - வரையறு.

27) கம்பியாக நீளும் தன்மை என்றால் என்ன?

28) நாம் உயிர் வாழ்வதற்கு மிக அவசியமானதும், அனைத்து உயிரினங்களும் சுவாசிக்கும்போது உள்ளிழுத்துக் கொள்வதுமான அலோகம் எது?

29) அமிலம் - வரையறு.

30) நிறங்காட்டி என்றால் என்ன?

31) உலர்பனி என்பது என்ன? அதன் பயன்களை எழுதுக.

32) கருவுறுதல் என்றால் என்ன?

33) வளர்சிதை மாற்றம் - வரையறு.

34) எலும்புக்கூடு என்றால் என்ன?

35) தாலஸ் - வரையறு.

**VI. கீழ்க்கண்டவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி:** **8×4=32**

36) ஒளிச்செறிவு பற்றி நீ அறிவது யாது?

37) பாஸ்கல் விதியைக் கூறி அதன் பயன்பாடுகளைத் தருக.

38) ஒளி எதிரொளிப்பு விதிகளைக் கூறுக.

39) அன்றாட வாழ்வில், வெப்பக்கடத்தல் நிகழ்விற்கு இரண்டு உதாரணம் தருக.

40) மின்முலாம் பூசுதல் என்றால் என்ன?

41) மனித காதின் அமைப்பு மற்றும் செயல்பாட்டை விவரி.

42) பின்வரும் குறியீடுகளால் குறிக்கப்பெறும் தனிமங்களின் பெயர்களை எழுதுக.

அ) Na ஆ) Ba இ) W ஈ) Al உ) U

43) ஆனோடு கதிர்களின் பண்புகளை எழுதுக.

44) வடிவத்தின் அடிப்படையில் நான்கு வகையான பாக்டீரியாக்களின் பெயர்களை எழுதுக.

45) டெரிடோஃபைட்டுகளின் ஏதேனும் நான்கு பண்புகளை எழுதுக.

**VII. விரிவான விடையளி:** **3×7=21**

46) அ) பெரிஸ்கோப் செயல்படும் விதம் பற்றி விவரிக்கவும்.

**(அல்லது)**

ஆ) தொடர் மற்றும் பக்க இணைப்புச் சுற்றை விளக்குக.

47) அ) i) கீழ்க்காண்பவற்றின் வேதி வாய்ப்பாட்டினை எழுதுக.

அ) அலுமினியம் சல்பேட் ஆ) பேரியம் குளோரைடு

இ) சில்வர் நைட்ரேட் ஈ) மெக்னீசியம் ஆக்சைடு

ii) கீழ்க்காணும் சேர்மங்களின் பெயர்களை எழுதுக.

அ) $CO$ ஆ) $N_2O$ இ) $NO$

**(அல்லது)**

ஆ) பல்வேறு நிலைகளில் நீர் மாசுபடுதலை விளக்குக.

48) அ) நுண்ணுயிரிகளால் மனிதர்களுக்கு ஏற்படும் பொதுவான நோய்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

**(அல்லது)**

ஆ) மருத்துவத் தாவரங்களின் பெயர்களை எழுதி அவற்றின் பயன்களை விவரிக்கவும்.

-------------

TNPSC JOB | www.tnpscjob.com